வெளியிடக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 174/2021

சுதேஷ் சீக்கரா ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ராம்தி தேவி மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் எஸ். ஓகா:

சங்கதி விவரங்கள்

1. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007 (சுருக்கமாக '2007 சட்டம்') பிரிவு 23-இன் கீழ் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிலிருந்து இம்மேல்முறையீடு எழுகிறது.

2. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், கேவாட் எண் 87, கடோனி எண் 124, கஸ்ரா எண் 315 கொண்ட 1 பிகா 18 பிஸ்வா அளவுடைய நிலத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் ஹரியானாவின் குருகிராம் மாவட்டம் மற்றும் தாலுகாவில் உள்ள பசாய் கிராமத்தில் கேவாட் எண் 247, கஸ்ரா எண் 269, (4 பிகாஸ் 0 பிஸ்வா) கொண்ட மொத்தம் 5 பிகாஸ் மற்றும் 3 பிஸ்வா அளவுடைய நிலத்தையும் பெற்றுக்கொண்டார். அவர் தனது தந்தையிடமிருந்து அதை மரபுவழியாக அடைந்ததாகக் கூறியுள்ளார். தரப்பினர்களின் மரபுவழி உறவுமுறை கீழ்க்காணுமாறு:



3. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அவரது மகள்களுக்கு (மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார்) ஆதரவாக வழக்குச் சொத்திலுள்ள பகுதி தொடர்பாக விடுதலை ஆவணத்தை நிறைவேற்றினார். மேற்படி விடுதலை ஆவணம் (எண் 18151) 2008 நவம்பர் 14 அன்று நிறைவேற்றப்பட்டு, முறைப்படி பதிவு செய்யப்பட்டது. மேற்படி விடுதலை ஆவணத்தின்படி, விடுதலை ஆவணத்தின் விடயப்பொருளான சொத்தில் மகள்கள் ஒவ்வொருவரும் மூன்றில் ஒரு பங்குக்கு உரிமையாளர்களானர். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 2009 மார்ச் 24 அன்று கஸ்ரா எண் 269 கொண்ட நிலத்தில் நான்கில் ஒரு பங்கு தொடர்பாக மற்றொரு விடுதலை ஆவணம் (எண் 25502) நிறைவேற்றியுள்ளார் என்பதும் கோப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்படி விடுதலை ஆவணம், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் அவரது மகன் சுந்தருக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதே நாளில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் அவரது மகன் சுந்தருக்கு ஆதரவாக கஸ்ரா எண் 315, கஸ்ரா எண் 314 மற்றும் கஸ்ரா எண் 341 கொண்ட நிலங்களில் ஒன்றில் அரை பங்கு தொடர்பாக மற்றொரு விடுதலை ஆவணம் (எண் 25504) நிறைவேற்றப்பட்டது. இரு விடுதலை ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டன.

1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார் ஆகியோர் 2009 மார்ச் 24-ஆம் தேதியிடப்பட்ட விடுதலை ஆவணத்தை (எண் 25504) எதிர்த்துரைப்பதற்காகவே உரிமையியல் நீதிமன்றத்தில் உரிமை வழக்கு எண் 175/2010-ஐ தாக்கல் செய்தனர். உரிமையியல் நீதிமன்றம் 2015 ஜூலை 17-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மூலம் 2009 மார்ச் 24-ஆம் தேதியிடப்பட்ட விடுதலை ஆவணத்தை முற்றிலும் செல்லாததென அறிவித்தது. விடுதலை ஆவணம், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரையும், மேல்முறையீட்டாளரையும், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயாரையும் கட்டுப்படுத்தாது என உரிமையியல் நீதிமன்றம் தீர்மானித்தது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயாரால் மற்றொரு விடுதலை ஆவணம் (எண் 25502) தொடர்பாக இதே பரிகாரம் கோரி உரிமை வழக்கு எண் 234/2010 தாக்கல் செய்யப்பட்டது. 2015 மார்ச் 19 அன்று இவ்வுரிமை வழக்கில் அதேபோன்றதொரு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

4. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கு விவரம் யாதெனில், மேற்கூறப்பட்ட தீர்ப்பாணைகளுக்கு எதிராக அவரது மகன் சுந்தர் மற்றும் பேரன் மனிஷ் ஆகியோர் மேல்முறையீடுகளை முன்கொணர்ந்தனர்; மேலும் அவர்கள் மேல்முறையீடுகள் நிலுவையில் இருக்கையில், 2009 மார்ச் 24-ஆம் தேதியிடப்பட்ட விடுதலை ஆவணங்களின் விடயப்பொருளான சொத்தினை மூன்றாம் தரப்பினருக்கு விற்றனர் என்பதாகும்.

5. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 2007-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 23-இன் கீழ் பராமரிப்பு தீர்ப்பாயத்தின் (உட்கோட்ட நடுவர்) முன்பாக மனு தாக்கல் செய்தார். 1-ஆம்

எதிர்மேல்முறையீட்டாளர், தனது மகன் மற்றும் மகள்களுடனான உறவில் விரிசல் ஏற்பட்டதாகவும், அதனால் தனது மகன் மற்றும் மகள்கள் தன்னை கவனித்துக்கொள்ளவில்லை என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் அவரது இரண்டு மகள்களுக்கு ஆதரவாக 2008 நவம்பர் 14 அன்று நிறைவேற்றப்பட்ட விடுதலை ஆவணம் சட்டவிரோதமானதும், செல்லாததுமாகும் என்பது அவரது (1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்) வாதுரையாகும். அதன்படி, 2008 நவம்பர் 14-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி ஆவணத்தை இரத்து செய்யுமாறு பிரிவு 23-இன் கீழ் அம்மனுவில் வேண்டுரைக்கப்பட்டது.

6. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிரிவு 23-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டது. பராமரிப்பு தீர்ப்பாயம் இறுதியாக 2018 மே 22-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் மனுவைத் தீர்வு செய்தது. 2008 நவம்பர் 14-ஆம் தேதியிடப்பட்ட விடுதலை ஆவணம் முற்றிலும் செல்லாததெனத் தீர்மானிக்கப்பட்டது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் பிள்ளைகள் அவரை கவனித்துக்கொள்ளத் தயாராக இல்லை என்ற காண்முடிவை பராமரிப்பு தீர்ப்பாயம் பதிவு செய்தது.

7. தற்போதைய மேல்முறையீட்டாளர், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் இணைந்து, பராமரிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவை நீதிப்பேராணை மனுவின் மூலம் உயர் நீதிமன்றத்தின் முன்பாக எதிர்த்துரைத்தார். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் மூலம் பராமரிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது.

பணிந்துரைகள்

8. உயர் நீதிமன்றம், வழக்கின் சங்கதிகளின்மீது முற்றிலும் கவனம் செலுத்தவேயில்லை என மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் வலியுறுத்திக் கூறினார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் வழக்குகளில், அவரது மகனுக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்ட விடுதலை ஆவணங்கள் முற்றிலும் செல்லாதவை என்று தீர்மானித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைகளை எதிர்த்து, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் மகன் அவர் முன்கொணர்ந்த மேல்முறையீடுகளை அவரே திரும்பப் பெற்றுக்கொண்டார் என்று கற்றறிந்த வழக்குரைஞர் சுட்டிக்காட்டினார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் மகன், தாயாருடன் கைகோர்த்துக்கொண்டார் என்பதும், அவரது மகனின் வற்புறுத்தலின்பேரிலேயே 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் பிரிவு 23-இன் கீழ் மனு தாக்கல் செய்தார் என்பதும் அவரது பணிந்துரையாகும். விடுதலை ஆவணத்தின் நிறைவேற்றமானது மோசடியினாலோ, வற்புறுத்தலினாலோ, தகாத செல்வாக்கினாலோ செல்லாததாக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குங்கூட பராமரிப்பு தீர்ப்பாயத்தின் முன்பாகவும், உயர் நீதிமன்றத்தின் முன்பாகவும் சான்றாதாரம் ஏதும் கோப்பில் முன்வைக்கப்படவில்லை என அவர் சமர்ப்பித்தார். பராமரிப்பு தீர்ப்பாயம் 2007-ஆம் ஆண்டு சட்டத்தில் கருத்துரைக்கப்பட்டுள்ளவாறு விசாரணை ஏதும் மேற்கொள்ளவில்லை என்பது மற்றொரு பணிந்துரையாகும். பிரிவு 23-இன் ஆக்கக்கூறுகள் நிலைநாட்டப்படவில்லை என்று அவர் பணிந்துரைத்தார்.

9. மேல்முறையீட்டாளர் ஒரு விதவை; மேலும் அவர் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் வசிக்கவில்லை என்ற சங்கதி பராமரிப்பு தீர்ப்பாயத்தால்

முற்றிலுமாகப் புறந்தள்ளப்பட்டுள்ளது என மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் மேற்கொண்டு சமர்ப்பித்தார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் அவரது மகனின் தூண்டுதலின்பேரிலேயே பிரிவு 23-இன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டது என்பது தெளிவு என அவர் எடுத்துரைத்தார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்குகளில் மேல்முறையீட்டாளரும், அவரது சகோதரியும் (2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் தாயார்) 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் உடன்வாதிகளாக இருந்தனர் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை வழங்குகையில் வழக்கின் தகுதிப்பாடுகளின்மீது கவனம் செலுத்தவேயில்லை என்று கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பித்தார்.

10. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், பராமரிப்பு தீர்ப்பாயத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகளின்மீது எங்களது கவனத்தை ஈர்த்தார். மேல்முறையீட்டாளர் மற்றும் அவரது சகோதரியால் விடுதலை ஆவணத்தின் கீழ் பெறப்பட்ட சொத்து திரு. அனில் கலோட் என்பவருக்கு அவர்களால் கிரையம் செய்யப்பட்டது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். மேற்படி வாங்குநர், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் கோரப்பட்ட பரிகாரத்தை வழங்குவதில், அவருக்கு ஆட்சேபணை இல்லையெனப் பதிவு செய்து தீர்ப்பாயத்தின் முன்பாக ஆணையுறுதியாவணத்தையும் தாக்கல் செய்தார் என அவர் எடுத்துரைத்தார். பராமரிப்பு தீர்ப்பாயத்தால் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தனது மகன் அல்லது மகளுக்கு ஆதரவாக எந்தச் சொத்தினையும் கொடையாகவோ, கைத்துறப்பாகவோ மாற்றியளிக்கமாட்டார் என ஐயத்திற்கிடமற்ற வகையில் தெரிவித்து ஆணையுறுதியாவணத்தைத் தாக்கல் செய்துள்ளார் என அவர் வாதுரைத்தார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்-தாயார், மகனின் தூண்டுதலின்பேரில் செயல்படவில்லை

என்பதை இது காட்டுகிறது என்று கற்றறிந்த வழக்குரைஞர் வாதுரைத்தார். தீர்ப்பாயம் உரிய விசாரணை மேற்கொண்டபின் 80 வயதுக்கும் மேற்பட்டவரான 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாகத் தீர்மானித்தது என்று அவர் வலியுறுத்திக் கூறினார். உயர் நீதிமன்றம் நீதிப்போராணை அதிகாரவரம்பில் தலையிடாதது சரியே என்று அவர் சமர்ப்பித்தார்.

பணிந்துரைகளின் பரிசீலனை

11. நாங்கள் பணிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்தோம். பொருண்மைசார் அம்சங்களைக் கையாள்வதற்கு முன்னர் சட்டஞ்சார்ந்த அம்சங்களின்மீது கவனம் செலுத்துவது அவசியமானதாகும். 2007-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பராமரிப்பு தீர்ப்பாயமாகச் செயல்படும் துணை கோட்ட நடுவர், விடயப்பொருளான விடுதலை ஆவணத்தை செல்லாததென அறிவிப்பதற்கு பிரிவு 23-இன் கீழான அதிகாரத்தைத் துணைகொண்டார். பெற்றோர் மற்றும் மூத்தக் குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலனுக்காக இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் உறுதியளிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பயனுள்ள வகையங்களை உருவாக்கும் நோக்கத்திற்காக 2007-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 2007-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான பல்வேறு அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு பிரிவு 7-இன் கீழ் பராமரிப்பு தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு தீர்ப்பாயம், அரசால் வகுத்துரைக்கப்படலாகும் ஏதேனும் விதிகளுக்குட்பட்டு அது தக்கதெனக் கருதுகின்றவாறான விசாரணை மேற்கொள்ளும்போது அத்தகைய சுருக்குமுறை விசாரணையைக் கடைப்பிடிக்கவேண்டும் என பிரிவு 8 வகைசெய்கிறது. பராமரிப்பு வழங்குவதற்கான அதிகாரத்தைத் தவிர தீர்ப்பாயம் 2007-ஆம் ஆண்டு

சட்டத்தின் பிரிவு 23-இன் கீழ் முக்கியமான அதிகாரவரம்பினைச் செயல்படுத்துகிறது. அது குறிப்பிடுவதாவது

"23. சொத்துரிமை மாற்றம் செல்லாததாக இருக்கும் சில சூழ்நிலைகள்.- (1) இச்சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் உரிமைமாற்றம் பெறுபவர், உரிமைமாற்றம் செய்பவருக்கு அடிப்படை வசதிகளையும், உடல்நலத்திற்கான அடிப்படைத் தேவைகளையும் வழங்கவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு எந்தவொரு மூத்தக் குடிமகனும் கொடையாகவோ அல்லது வேறுவிதமாகவோ அவரது சொத்தினை உரிமைமாற்றம் செய்திருக்குமிடத்து, அத்தகைய உரிமைமாற்றம் பெறுபவர் அவ்வாறான வசதிகளையும், உடல்நலத்திற்கான தேவைகளையும் வழங்க மறுக்கும் அல்லது தவறும்பட்சத்தில், அந்தச் சொத்தின் உரிமைமாற்றம் மோசடியினாலோ, வலுக்கட்டாயத்தினாலோ, தகாத செல்வாக்கினாலோ செய்யப்பட்டுள்ளது எனக் கருதப்படுவதுடன், உரிமைமாற்றம் செய்தவரின் விருப்பத்தின்பேரில் தீர்ப்பாயத்தால் செல்லாததென அறிவிக்கப்படவேண்டும்.

(2) மூத்த குடிமகன் எவருக்கும் ஒரு சொத்திலிருந்து வாழ்க்கைப் பொருளுதவி பெறும் உரிமை இருந்து, அச்சொத்து அல்லது அதனுடைய பகுதி உரிமைமாற்றம் செய்யப்படுகிறபோது, சொத்துரிமை மாற்றம் பெற்றவர் அந்த உரிமைக்குரிய அறிவிப்பைப் பெற்றிருந்தால் அல்லது அந்த உரிமைமாற்றம் கொடையாக இருந்தால், அந்த உரிமைமாற்றம் பெற்றவருக்கு வாழ்க்கைப் பொருளுதவி பெறுவதற்குரிய உரிமையைச்

செயற்படுத்தலாமேயன்றி, உரிமைக்கான அறிவிப்பு இல்லாமல் மறுபயனுக்காக சொத்துரிமை மாற்றம் பெறுபவருக்கு எதிராக அல்ல.

(3) எந்தவொரு மூத்த குடிமகனும் உட்பிரிவுகள் (1) மற்றும் (2)-இன் கீழான உரிமைகளைச் செயலுறுத்த இயலாமலிருந்தால், அவரது சார்பாக பிரிவு 5-இன் உட்பிரிவு (1)-க்கான விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அமைப்பினால் நடவடிக்கை எடுக்கப்படலாம்." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

12. "கொடையாகவோ அல்லது வேறுவிதமாகவோ" என்னும் சொல்லமைப்பினைப் பயன்படுத்தியதிலிருந்து தெளிவாகத் தெரியவருவதுபோல் பிரிவு 23-இன் உட்பிரிவு (1)-ஆனது அனைத்துவகையான உரிமைமாற்றங்களையும் உள்ளடக்குகிறது. பிரிவு 23-இன் உட்பிரிவு (1)-ஐ ஈர்ப்பதற்கு கீழ்க்காணும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்:

அ. உரிமைமாற்றம் பெறுபவர் உரிமைமாற்றம் செய்பவருக்கு அடிப்படை வசதிகளையும், உடல் நலத்திற்கான அடிப்படை தேவைகளையும் வழங்கவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்கவேண்டும்; மற்றும்

ஆ. உரிமைமாற்றம் பெறுபவர் உரிமைமாற்றம் செய்பவருக்கு அத்தகைய வசதிகளையும், உடல்நலத்திற்கான தேவைகளையும் வழங்க மறுக்கிறார் அல்லது தவறிவிடுகிறார்.

மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளும் சட்டப்புனைவினால் பூர்த்தி செய்யப்பட்டால், உரிமைமாற்றமானது மோசடியாலோ, வலுக்கட்டாயத்தினாலோ, தகாத செல்வாக்கினாலோ செய்யப்பட்டதாகக் கருதப்படும். உரிமைமாற்றம் செய்பவர் வேண்டுறுத்துவதன்பேரில் அத்தகைய உரிமைமாற்றம் செல்லாததாகிவிடும்; மேலும் பராமரிப்பு தீர்ப்பாயம், உரிமைமாற்றத்தினை செல்லாததென அறிவிப்பதற்கு அதிகாரவரம்பினைப் பெறுகிறது.

13. ஒரு மூத்த குடிமகன் (ஆண்/பெண்) அவருக்கு நெருக்கமானவர்களுக்கு ஆதரவாக கொடை ஆவணம் அல்லது கைத்துறப்பு ஆவணம் நிறைவேற்றுவதன் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ அவரது (ஆண்/பெண்) சொத்தினை விடுவிக்கும்போது அந்த மூத்த குடிமகனைக் கவனித்துக்கொள்ளும் நிபந்தனை அதனுடன் கட்டாயமாகச் சேர்க்கப்படுவதில்லை. அதற்குமாறாக, மிகப்பெரும்பாலும் அத்தகைய உரிமைமாற்றங்கள் எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது அன்பு மற்றும் பாசத்தால் செய்யப்படுகின்றன. எனவே, பிரிவு 23-இன் உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உரிமைமாற்றத்துடன் தொடர்புடையவை எனக் கூறப்படும்போது அத்தகைய நிபந்தனைகள் இருப்பது தீர்ப்பாயத்தின் முன்பாக நிலைநாட்டப்படவேண்டும்.

14. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிரிவு 23-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கவனமாக ஆராய்ந்ததில், உரிமைமாற்றம் பெற்றவர்கள் (1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் மகள்கள்) 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அடிப்படை வசதிகளையும், உடல் நலத்திற்கான அடிப்படைத் தேவைகளையும் வழங்கவேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு விடுதலை ஆவணம் நிறைவேற்றப்பட்டுள்ளது என வாதிடப்படக்கூட

இல்லை என்பது தெரிகிறது. பராமரிப்பு தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 2018-ஆம் ஆண்டு மே 22-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவிலுங்கூட அவ்வாறான காண்முடிவு ஏதும் பதிவு செய்யப்படவில்லை. தரப்பினர்களால் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. தீர்ப்பாயத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையிலிருந்து தெரியவருவதுபோல் மேல்முறையீட்டாளரால் பதில் தாக்கல் செய்யப்பட்ட உடனேயே அந்த மனு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உரிமைமாற்றம் செய்பவர் மூத்த குடிமகனுக்கு அடிப்படை வசதிகளையும், உடல் நலத்திற்கான அடிப்படைத் தேவைகளையும் வழங்கும் நிபந்தனைக்குட்பட்டு உரிமைமாற்றத்தை செயற்படுத்துவதே பிரிவு 23-இன் உட்பிரிவு (1)-ஐ பொருத்திப் பார்ப்பதற்கான இன்றியமையாத் தகுதிக்கூறாகும். தற்போதைய வழக்கில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று அத்தகைய நிபந்தனைக்குட்பட்டு விடுதலை ஆவணம் நிறைவேற்றப்பட்டுள்ளதென 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் வாதுரைக்கப்படவேயில்லை.

15. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் ஆணையுறுதியாவணத்தை நாங்கள் நுண்ணாய்வு செய்தோம். எதிர் ஆணையுறுதியாவணத்திலுங்கூட விடுதலையானது அத்தகைய நிபந்தனைக்குட்பட்டது என்று வாதிடப்படவில்லை. மேல்முறையீட்டாளருக்கு அவரது தாயாரை கவனித்துக்கொள்ளும் எண்ணமில்லை என்று மட்டுமே வாதிடப்பட்டுள்ளது. ஆகவே பிரிவு 23-இன் உட்பிரிவு (1)-இல் சேர்க்கப்பட்டுள்ள இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால், பராமரிப்பு தீர்ப்பாயத்தின் உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல. துரதிருஷ்டவசமாக, உயர் நீதிமன்றம் வழக்கின் தகுதிப்பாடுகளின்மீது கவனம் செலுத்தவேயில்லை.

16. நில மேம்பாட்டாளரின் தரப்பில் இடையீட்டுக்கான விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இடையீட்டாளர், தான் விடுதலை ஆவணத்தின் விடயப்பொருளான நிலத்தின் ஒரு பகுதியை மேல்முறையீட்டாளரிடமிருந்து வாங்கிய உண்மையான வாங்குநர் என்றும், மேம்பாட்டுக்கான கணிசமான பணியை மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். இடையீட்டாளரால் கோரப்பட்ட உரிமைகள் குறித்து கையாளுவதற்கு எங்களுக்கு அவசியமேதுமில்லை. இடையீட்டாளரால் கோரப்பட்ட உரிமைகள் தொடர்பான அனைத்து கேள்விகளும் உரிய வழக்கு நடவடிக்கைகளில் தீர்மானிப்பதற்காக விடப்படுகின்றன.

17. எனவே, மேலே பதிவு செய்யப்பட்டுள்ள காரணங்களுக்காக மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. பராமரிப்பு தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்ட 2018 மே 22-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவும், உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 2019 மே 21-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவும் இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகின்றன; மேலும் 2007-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 23-இன் கீழ் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவேதுமில்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சய் கிஷன் கவுல்

மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் எஸ். ஓகா

புது தில்லி;

6.12.2022

பொறுப்புத்துறப்பு

“வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்.”